**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி,</u>**

<u>முன்னிலை:</u> திரு. S.K.P. திலிப்பாபு M.A.M.L.,
நீதித்துறை நடுவர்,
காட்பாடி

<u>2026 வது வருடம் ஆகஸ்ட் திங்கள் 06 ஆம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>குற்றப்பல்வகை மனு எண் 1114/2026</u>**

ஜானி பால்ராஜன், த/பெ ஜான்பீட்டர்

.... மனுதாரர் /குற்றஞ்சாட்டப்பட்டவர்

//எதிராக//

காவல் உதவி ஆய்வாளர்,
காட்பாடி காவல் நிலையம்,
குற்ற எண். 137/2026 .... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது 06.08.2026 இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்து மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் தரப்பில் அவர்களது கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பாலாஜி, S.டெய்சி அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1.மனுதாரர்/ குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிரிவு 187(2) BNSS-ன் கீழ் பிணைகோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மீது காட்பாடி காவல் நிலையம் குற்ற எண். 137/2026 சட்டப் பிரிவுகள் U/s. 27(1) Arms Act, 111 BNS-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவத்திற்கும், மனுதாரருக்கும் எந்த வித தொடர்பும் இல்லையென்றும், மனுதாரர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் 05.06.2026 ஆம் தேதியிலிருந்து நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரரை பிணையில் விடும் பட்சத்தில், அவர் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று தவறாது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு முன்னிலையாவார் என்றும் பிணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

3. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 05.06.2026 ஆம் தேதியிலிருந்து 63 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், குற்றச்சாட்டிற்கான தண்டனை மற்றும் அதன் தன்மையை கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 63 நாட்கள் ஆகியுள்ளதாலும், வழக்கில் இன்னும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படாததாலும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிரிவு 187(2) BNSS –ன் படி சட்டப்படியான பிணைபெற தகுதியுடையவர் ஆகிறார் என்பதை கருத்தில் கொண்டும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் முன்னிலையாவதை உறுதி செய்து கொள்ள தகுந்த பிணையாளர்களை பெற்று, உரிய நிபந்தனைகளுடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை பிணையில் விடுவிக்கலாம் என தீர்வு கண்டு, இப்பிணை மனுவானது இந்நீதிமன்றத்தால் கீழ்காணும் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ரூ.10,000/–(ரூபாய் பத்தாயிரம்) பிணை தொகைக்கு பிணைமுறி ஆவணம் எழுதி கொடுக்க வேண்டுமென்றும், அதே தொகைக்கு இரு பிணையாளர்களை தனித்தனியே 6 மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய உரிய முகவரி ஆவணங்களுடன் பார்ம் எண். 46–யை சமர்ப்பிக்கவேண்டுமென்றும்,

2. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையில் இருக்கும் காலத்தில் சாட்சிகளை கலைக்க கூடாது என்றும், தலைமறைவாகி விடக் கூடாது என்றும், வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 06.08.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.06 18:40:03 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.